*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

***No. LGS/PRO/2021*** ***01 மே, 2021***

**பத்திரிகை செய்தி**

கொரோனா பெருந்தொற்று உலகம் முழுவதும் அச்சத்தைத் தந்திருக்கிறது. அதன் இரண்டாவது அலை இந்திய நாடு முழுவதும் பெரும் பாதிப்பை ஏறப்டுத்தி வருகிறது. சில மாநிலங்களில் மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகி இருக்கிறார்கள். புதுச்சேரியிலும் கொரோனா தொற்று அதிகரித்து வரும் சூழலில் அதனைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

இந்நிலையில், கொரோனா தொற்றின் இரண்டாவது அலையை எதிர்கொள்வது - விழிப்புணர்வு, தடுப்பு முறைகள் மற்றும் சிசிச்சை குறித்து அமெரிக்காவின் லீட் இந்தியா நிறுவனம் இன்று(01-05-2021) ஏற்பாடு செய்த இணையவழி கருத்தரங்கில் அமெரிக்கா, இந்தியா உட்பட உலகெங்கிலும் இருந்து 10,000க்கும் மேற்பட்ட மருத்துவ நிபுணர்களும் அறிஞர்களும் கலந்து கொண்டனர். மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். முன்னதாக லீட் இந்தியா நிறுவனத்தின் அமைப்பாளரும் தலைவருமான டாக்டர் ஹரி எப்பனப்பள்ளி அவர்கள் கருத்தரங்கின் நோக்கம் குறித்து விளக்கினார். கருத்தரங்கில் பேசிய துணைநிலை ஆளுநர்,

தற்போதைய கொரோனா சூழலில் இளைஞர்கள் மனதிலும் மக்கள் மத்தியிலும் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் கருத்தரங்கத்திற்கு ஏற்பாடு செய்த லீட் இந்தியா நிறுவனத்தைப் பாராட்டுகிறேன்.

கொரோனா பெருந்தொற்றின் முதலாவது அலையின் போது தொலைநோக்கு பார்வை கொண்ட மாண்புமிகு பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் ஊரடங்கு கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தினார். ஊரடங்கு லட்சக்கணக்கான மக்களின் வாழ்வை காப்பாற்றிய போதிலும், நாடு முழுவதும் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை பாதித்தது. இதிலிருந்து இந்தியாவை மீட்டெடுக்க ஆத்ம நிர்பார் பாரத் திட்டத்தை பிரதமர் அறிமுகப்படுத்தினார்.

கொரோனா பெருந்தொற்றின் இரண்டாவது அலை, நம்முடைய பல்வேறு முயற்சிகளைத் தாண்டியும் மிகவும் வேகமாக பரவி வருகிறது. வரும் மே இரண்டாவது அல்லது மூன்றாவது வாரத்தில் இது உச்சத்தைத் தொடக் கூடும் என்ற அச்சமும் ஏற்பட்டிருக்கிறது.

இந்த தருணத்தில், தொற்றில் இருந்து மக்களைக் காப்பாற்றும் முயற்சியில் இரவு பகலாக அயராது உழைக்கும் மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள் மற்றும் களப்பணியாளர்கள் சேவைகளுக்கு நான் தலை வணங்குகிறேன்.

கோவிட் நடைமுறைகளை பின்பற்றியும், தடுப்பூசி, கொரோனா பரிசோதனைகள் ஆகியவற்றின் மூலமாகவும் இந்த கடுமையான சூழ்நிலையை நாம் வெற்றி கொள்ள வேண்டும்.

நம்முடைய சுகாதாரக் கட்டமைப்பை மேம்படுத்தும் மூலமாகவும் சிறிய கட்டுப்பாட்டு மண்டலங்களை ஏற்படுத்துவதன் மூலமாகவும் மக்கள் மத்தியில் மிகப் பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மூலமாகவும் நாம் நமது இலக்கை அடைய முடியும் என்று கூறினார்.